### அர்ச். மத்தேயு சுவிசேஷம் 5:10

நீதியினிமித்தம் உபத்திரவப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்: ஏனெனில் மோட்ச இராட்சியம் அவர்களுடையது. (1 இரா . 2:20; 3:14; 4:14.)

### கொரிந்தியர் 2 12:10

இதனிமித்தம் எனக்கு உண்டா கும் பலவீனங்களிலும், அவமானங்க ளிலும், இக்கட்டுகளிலும், கலாபங்களி லும், நெருக்கிடைகளிலும், கிறீஸ்துவைப்பற்றி நான் பிரியப்படுகிறேன். ஏனெனில் எப்போது பலவீனப்படுகிறே னோ, அப்போது வல்லவனாயிருக்கி றேன்.

### உரோமாபுரியார் 1 8:35

அப்படியிருக்கக் கிறீஸ்துநாதருடைய சிநேகத்தைவிட்டு நம்மைப் பிரிக்கப்போகிறது யார்? துன்பமோ? நெருக்கிடையோ? நிர்வாணமோ? ஆபத்தோ? கலாபனையோ? பயமோ?

### அர்ச். மத்தேயு சுவிசேஷம் 5:44

நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: உங்கள் சத்துராதிகளைச் சிநேகியுங்கள். உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களை உபத்திர வப்படுத்துகிறவர்களுக்காகவும், உங்கள் பேரில் அபாண்டஞ் சொல்லுகிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுங்கள். (லூக். 6:27; 23:34; உரோ . 12:20; அப். 7:59.)

### அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 15:18

உலகம் உங்களைப் பகைத்தால், உங்களைப் பகைக்குமுன்னே என்னைப் பகைத்ததென்று அறிந்துகொள்ளுங்கள்.

### அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் 6:22

மனுமகனைப்பற்றி ஷஜனங்கள் உங்களைப் பகைத்து, உங்களை விலக் கித் தூஷணித்து உங்கள் பெயரை ஆகா தென்று தள்ளும்போது, நீங்கள் பாக்கிய வான்களாயிருப்பீர்கள். (மத். 5:11.)

### உரோமாபுரியார் 1 12:14

உங்களை உபத்திரவப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள். ஆசீர்வதிக்கவேண்டியதேயன்றிச் சபியாதேயுங்கள். (மத். 5:44.)

### இராயப்பர் பொது நிருபம் 1 5:8

மன அடக்கமும், விழிப்பும் உள்ள வர்களாயிருங்கள். ஏனெனில் உங்கள் சத்துருவாகிய பசாசு கர்ச்சிக்கிற சிங் கத்தைப்போல் யாரை விழுங்கலா மோவென்று தேடி, சுற்றித்திரிகிறது.

### சங்கீதங்கள் 31:15

### அர்ச். மாற்கு சுவிசேஷம் 10:29-30

அதற்கு சேசுநாதர் பிரத்தியுத் தாரமாக: என்னிமித்தமாகவும், சுவி சேஷத்தினிமித்தமாகவும், வீட்டையா வது, சகோதரர், சகோதரிகளையா வது, தந்தை தாயையாவது, பிள்ளை களையாவது, காணிகளையாவது விட்டு விட்ட எவனும், இப்பொழுது இம்மையிலே துன்பங்களோடு நூறத்தனையாய் வீடுகளையும், சகோதரரையும், சகோதரி களையும், தாய்மார்களையும், பிள்ளை களையும், நிலங்களையும் பெற்றுக் கொள்வதுமன்றி, மறுமையிலே நித்திய ஷஜீவியத்தையும் அடையாதிருப்பதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். மூ 30. சேசுநாதரைப் பின்செல்லும்படி இவ்வுலக நன்மைகளை விட்டுவிடுகிறவர்கள் அவைகளுக்குப் பதிலாய் ஞான நன்மைகளைக் கைக்கொள்ளுவார்கள். அவைகளால் இவ்வுலகத்திலே முதலாய் உண்டாகும் மனச்சமாதானமும் ஞான சந்தோஷமும், தாங்கள் துறந்துவிட்ட இலௌகீக நன்மைகளிலும் நூறுமடங்கு மாத்திரமல்ல, இன் னும் அதிகமான பெரிய நன்மைகளாகவேயிருக்கின்றன. மேலும் சேசுநாதர்சுவாமி யைப்பற்றியும், மோட்ச இராச்சியத்தைப்பற்றியும், தங்கள் தாய் தகப்பன், சகோதரர், வீடுவாசல், காணி பூமிகளை விட்டுவிடுகிற சந்நியாசிகளுக்கு நூறு பங்கு அதிக பட்ச முள்ள சிரேஷ்டர்களும், மற்றுஞ் சந்நியாசிகளும், தாய் தந்தைகள் சகோதரரிடமா யிருப்பதுமல்லாமல், அவர்கள் போகுமிடமெல்லாம் அவர்களுக்கு வீடுவாசல் காணி பூமியாகிற மடங்களும் நிலங்களும் அனுபவிக்கக் கிடைக்குமென்று அர்த்தமாம்.

### சங்கீதங்கள் 23:4

வீணில் தன் ஆத்துமாவை உபயோகப்படுத்தாமலும், தன் புறத் தியானுக்குக் கபடாய் ஆணை யிடாமலுங் கரங்களில் மாசற்றவனும் இருதயத்தில் பரிசுத்தமுள்ளவனுமாயிருப்பவன்தான்.

### அப்போஸ்தலருடைய நடபடிகள் 22:7

நான் தரையிலே விழுந்தேன். அப்போது : சவுலே, சவுலே, ஏன் என்னை உபாதிக்கிறாய் என்று எனக்குச் சொல்லுகிற ஓர் குரலொலியைக்கேட்டு,

தீமோத்தேயு 2 3:12

அப்படியே சேசுக்கிறீஸ்துநாத ருக்குள் பக்தியாய் நடக்க விரும்புகிற யாவரும் துன்ப துரிதப்படுவார்கள்.